# குப்பிளான் பகுதியில் ராணுவம் புலிகள்மோதல்

## பத்து இராணுவத்தினர் பலி
## கவச வாகனம் சேதம்

நேற்றுக்காலை 5. 45 மணியளவில் குரும்பசிட்டியிலிருந்து குப்பிளான் கற்கரைப்பிள்ளையார் கோயில் பக்கமாக கனரக வாகனங்கள் சகிதம் வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர். இராணுவத்தினரின் கவச வாகனம் விடுதலைப்புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலால் சேதமடைந்தது. பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். சுமார் ஒரு மணி நேரம் இடம் பெற்ற கடும் சமரின் பின் இராணுவத்தினர் பின்வாங்கினர். பின்னர்இராணுவ முகாமிலிருந்துபலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. குப்பிளான். ஏழாலை பகுதிகளில் அவை வீழ்ந்து வெடித்தன. (48)


பக்கங்கள் நான்கு . விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 05 ஒலி 06 பிரமோதூத கார்த்திகை 17 (03-12-1990) திங்கள்


# அகதிகள் வெளியேறவேண்டும்
# மேற்கு ஜேர்மனியில் சுவரொட்டிகள்

## கிழக்கு மேற்கு இணைப்பின் எதிரொலி?

வெளிநாட்டவர்களை வெளியேறுமாறு கேட்டு மேற்கு ஜேர்மனியின் சில மாநிலங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்கு ஜேர்மனியில் தற்போது ஈரான்,ஈராக், குவைத் இலங்கை, இந்தியா, துருக்கி முதலிய நாடுகளைச் சேர்ந்த பலலட்சம் மக்கள் அகதி அந்தஸ்துக்கோரி வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நாடுகளில் இடம்பெறும் உள்நாட்டுப் போரினாலேயே இம்மக்கள் அகதிகளாகி மேற்கு ஜேர்மனியில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

அண்மையில் கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் ஒன்றிணைந்ததும், வரலாற்றுப்புகழ் மிக்க பேர்லின் சுவர் தகர்க்கப்பட்டதும் தெரிந்ததே.

இணைப்பையடுத்து கிழக்கு ஜேர்மானியர்கள் பெரும் தொகையில் மேற்கினுள் நுழைந்துள்ளமையால் அங்கே இருப்பிடம் வேலையின்மை முதலிய புதிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

கிழக்கு ஜேர்மனியில் இருந்து வந்தவர்களே சுவரொட்டிகளை ஒட்டியிருக்கலாம் என அங்கு வாழும் இலங்கைத் தமிழர்கள் கருதுகிறார்கள்.

மேற்கு ஜேர்மன் அரசாங்கம் இதுவரை அகதிகள் வெளியேற்றம் பற்றி எதுவித அறிவித்தலும் கொடுக்கவில்லை என்பதும குறிப்பிடத்தக்கது. (ப 1)

## குருநகர் பகுதி மீனவர்களை கடற்படையினர் மிரட்டுகின்றனர்

மண்டைதீவுக்கு அப்பால் கடலில் தொழில் புரியும் குருநகர் மீனவர்களை கடந்த சில நாட்களாக கடற்படையினர் சிறுபடகுகளில் வந்து மிரட்டுகின்றனர்.

இம்மீனவர்கள் பிடிக்கும் மீன், இறால் போன்றவற்றை கடற்படையினர் பறித்தெடுப்பதாகவும், வலைகளை அறுத்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் நகரில் இடம்பெற்ற

—04 ஆம் பக்கம் பார்க்க

## திருமலை நகரில் பொலிஸார் மீது புலிகள் துப்பாக்கிச் சூடு

திருகோணமலை நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது எனினும் பொலிஸாருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை அநுராதபுரமருகே நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் ஓர் இராணுவசிப்பாயும் பொலிஸார் ஒருவரும் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## முன்னாள் பிரதமருக்கு கல்லெறி

முன்னாள் பிரதமர் வி.பி சிங்கிற்கு நேற்று போபால் ரயில் நிலையத்தில் வைத்து கும்பல் ஒன்று கல்வீச்சு நடத்தியது இச்சம்பவத்தில் இருபது பேர் காயமடைந்தனர். இதைக்கண்டிக்கும் முகமாக பின்னர் சிங் மத்திய

—04ஆம் பக்கம் பார்க்க

## குருமன் வெளித்துறையில் இராணுவம் கெடுபிடி

கடந்த புதனன்று மண்டூரில் இருந்து வந்துகொண்டிருந்த பொதுமக்களை குருமன் வெளித்துறையில் வழிமறித்து இராணுவத்தினர் ஒரு பொதுமகனைச் சுட்டுக் கொன்றனர். மற்றுமொருவர் கைது செய்யப்பட்டார்.

ஒந்தாச்சிமடத்தைச் சேர்ந்த சுந்தரம் பிரபாகரன் (25) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார். கைது செய்யப்பட்ட குருசுத்தம்பி இராசப்பா இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமும் இதே

— 04 ஆம் பக்கம் பார்க்க

## உன்னிச்சை இராணுவம் மிதிவெடியில் காலிழப்பு

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உன்னிச்சை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் கோப்பாய் வெளி எனும் இடத்தில் விடுதலைப்புலிகள் ஏற்கனவே வைத்த மிதி வெடியில் சிக்கிய தில் ஒரு இராணுவச்சிப்பாய் காலிழந்தார்.

கடந்த வெள்ளியன்றும் இவ் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் முரசு வீதியில் இருந்த மிதி வெடியில் சிக்கிஒரு சிப்பாய் காலிழந்துள்ளார். (71)

## குருநகர்ப்பகுதி ஏழைமக்களை அரியாலையில் குடியேற்ற பங்குத்தந்தை நடவடிக்கை

குருநகரில் உள்ள மிகவும் வறிய மக்களை அரியாலை மணியம் தோட்டம் போன்ற பகுதிகளில் குடியேற்றுவதற்கு குருநகர் பங்குத்தந்தைவண பிதா இம்மனுவேல் அடிகளார் தற்போது முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இதன்படி மிகவும் வறிய மக்களை தம்மிடம் வந்து பெயர் விபரங்களை பதிந்து கொள்ளுமாறும் தனது பங்குக்குட்பட்ட பகுதிகளான புனித யாகப்பர் ஆலயம், புதுமை மாதா ஆலயம் ஆகிய பங்கு மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதாகவும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## நிவாரணம் பெறுவதற்கு கிராமசேவகர் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளவர்கள் தமது குடும்ப விபரங்களை, தாம் இடம் பெயர்ந்து தங்கியுள்ள பகுதி கிராமசேவகர் மூலமாக அப்பிரிவு உதவி அரசாங்க அதிபருக்கு அறிவிக்க வேண்டும் என யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கிராமசேவகர் மூலம் அறிவிக்கப்பட்டும் எவருக்காவது நியாயபூர்வமான நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை அல்லது அவர்களின் கோரிக்கைகள் கவனிக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப்போரில் ஈழத்து கலைஞர்களும் இணைந்து கொள்ளவேண்டும் - யோகி

தென்னிந்திய மெல்லிசைப் பாடல்கள் கொண்டு தொகுக்கப்பட்ட இசை நிகழ்ச்சிகள் ஒரு காலத்தில் பிரபலமாய் விளங்கின. ஆனால் இன்று தமிழீழ விடுதலை வேட்கையை வெளிப்படுத்தும் கீதங்கள் தமிழீழத்தின் மூலை முடுக்கெல்லாம்ஒலிக்கின்றன.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ.மகேந்திரராசா (மாத்தயா) யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற "வேங்கைகளின் விடுதலை வேதங்கள்" ஒலிப் பதிவு நாடா அறிமுக விழாவில் குறிப்பிட்டார். கவிஞர் புதுவை ரத்தினதுரை தலைமைவகித்தார்.

இவ் விழாவில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர்நாயகம் திரு. யோகரட்ணம் யோகி தமது உரையில், "தமிழின விடு

—04 ஆம் பக்கம் பார்க்க

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பிரதி பண்ணும் படிவங்களுக்கு பதிலாக விண்ணப்பப்படிவங்களே அனுப்பப்பட்டுள்ளன

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பிரதி பண்ணி வழங்கும் கையெழுத்துப் படிவங்களுக்குப் பதிலாக. இதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் கொழும்பிலுள்ள பதிவாளர் நாயக அலுவலகத்தால் யாழ் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக இவ்வலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கும் விண்ணப்பப்படிவங்கள் இல்லாமையினால் 25000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தேங்கிக்கிடக்கின்றன.

மின்சாரமின்மையால் இங்குள்ள போட்டோ பிரதிஎடுக்கும் இயந்திரமும் செயலற்றுக் கிடக்கிறது.

இந்நிலையை இங்குள்ள அதிகாரிகள் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு அறிவித்த போது உரிய பத்

—04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு வைத்தியசாலையில் மருந்துகள் இல்லா நிலை

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் மிக முக்கியமான மருந்துவகைகள் இல்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

பென்சிலின் அம்பிசிலின் மற்றும் மனநோயாளர்க்கான குழிகைகள், ஏற்புத்தடுப்பூசி முதலானவை இங்கு இல்லை எனவும் இது விடயத்தில் உடன் நடவடிக்கை

—04 ஆம் பக்கம் பார்க்க

சேர். பொன் இராமநாதன் நினைவுக்கூட்டத்தில் 'தொண்டா'

# தமிழினம் ஒன்றுபட்டாலே உயர்வு

# பேதம் வலுப்பதில் பயனேதுமில்லை

"தமிழர்களுக்கிடையே பேதம் இருக்கும்வரை சமுதாயம் மீட்சிபெற முடியாது" என்று சேர். பொன் இராமநாதன் நினைவுதினக் கூட்டத்தில் பேசுகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் கூறினார்.

"தமிழர்களுக்குள்ளேயே இலங்கைத் தமிழன், இந்தியத்தமிழன் என்ற பேதம் இருக்கும் வரை தமிழர் சமுதாயம் மீட்சி பெறவே முடியாது. யாவரும் ஒரே குலம் என்ற உணர்வு எப்போது வருகிறதோ அப்போதுதான் தமிழ்ச் சமுதாயம் உயர்ந்தோங்க முடியும்" என்றும் அவர் சொன்னார்.

கொழும்பு காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கேட்போர் கூடத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

## புதிய திட்டம்

## அரசினர் தாதிகளுக்கு அமெரிக்காவில் கடமை

அரசினர் வைத்தியசாலைகளில் கடமைபுரியும் தாதிகள் இரண்டு வருட சம்பளமற்ற விடுமுறையில் அமெரிக்காவில் கடமைபுரியும் புதிய திட்டம் ஒன்றினை சுகாதார அமைச்சு தயாரித்துள்ளது.

அமெரிக்க வைத்தியசாலைகளில் கடமை புரிவதற்கான தகுதிகாண் முதற் பரீட்சை அடுத்த வருடம் மார்ச் மாதம் கொழும்பில்நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (16)

## வைத்தியசாலையில் மருந்து இல்லை

வேலணை அரசினர் இராமிய வைத்தியசாலையில் வயிற்றோட்டம், கண் நோய், காய்ச்சல் போன்ற நோய்களுக்குரிய முக்கிய மருந்து வகைகள் இல்லாமல் இருந்து வருவதால் வைத்தியசாலையை நாடிவரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (19)

## ஒன்றரை லட்சம் விண்ணப்பங்கள்

கொள்ளையடிக்கப்பட்ட தமது அடையாள அட்டைகளை மீளப்பெறுவதற்கு ஒன்றரை இலட்சம்பேர் தென்னிலங்கையிலிருந்து விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (16)

## ஸ்ரீகாந்த் மீண்டும் இந்திய அணியில்

## பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியா வருகிறது

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, 21-ம் திகதி தொடக்கம், இம்ரான்கான் தலைமையில் மூன்றுமாத கால சுற்றுப் பயணம் ஒன்றை இந்தியாவில் மேற்கொள்ளவுள்ளது; இதற்கான ஒப்புதலை இந்திய கிரிக்கெட்சபை சென்றவாரம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இச்சுற்றுப் பயணத்தின் போது பாகிஸ்தான் அணி 5, ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளிலும் 5, ஐந்து நாள் ரெஸ்ட் போட்டிகளிலும், 5, மூன்று நாள் போட்டிகளிலும் கலந்து கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தமுறைபாகிஸ்தானில் இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டித் தொடரில் இடம்பெற்ற 4, ஐந்து நாள் போட்டிகளில் 112 ஓட்டங்களை மாத்திரமே இந்திய அணித்தலைவர் ஸ்ரீகாந்த் பெற்றார் என்பதை முக்கிய காரணமாகக் காட்டி அவரை அணியில் இருந்து விலக்கிய இந்திய கிரிக்கெட் சபை மீண்டும் அவரை இம்முறை பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிகளில் ஆட் அணியில் சேர்த்துக்கொள்ள இருப்பதாகத் தகவல் தெரிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன, (16)

## அனலைதீவு படகுச் சேவையை எழுவைதீவுக்கு நீடிக்கக்கோரிக்கை

எழுவைதீவில் இருக்கும் பிரயாணிகளின் போக்குவரத்து வசதி கருதி குறிகாட்டுவான் இறங்குதுறைக்கானபடகுச்சேவை ஒன்றினை நடாத்தி உதவுமாறு ஊர்காவற்றுறை பங்குத்தந்தை அருட்திரு. ஏ. எவ். கிருபானந்தன் அடிகளார் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தை மகஜர்மூலம் கேட்டுள்ளார்.

தற்சமயம் கடற்படை அனுமதியுடன் குறிகாட்டுவானில் இருந்து அனலைதீவுக்கான மோட்டார்ப் படகுச் சேவை ஒன்று நடைபெற்று வருகின்றது. இவ்வாறு நடத்தப்பட்டு வரும் படகுச்சேவையில் எழுவைதீவிற்குச் செல்வதற்காக ஏறும் எழுவைதீவு மக்கள் அனலைதீவில் இறங்கி பிறகு பல சிரமங்களின் மத்தியில் அதிக பணம் கொடுத்து மீன்பிடி வள்ளங்களை வாடகைக்கு அமர்த்தி எழுவைதீவு செல்ல வேண்டிய அவல நிலைக்குள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறு கஷ்டப்படும் எழுவைதீவு வாழ்மக்களினது பிரயாண வசதிகருதி அனலைதீவுக்கு வரும் இந்தப் படகுச் சேவையினை எழுவைதீவு துறைமுகம்வரை சேவையாற்றுவதற்காக நீடித்து தவுமாறும் பங்குத்தந்தை மகஜரில் கேட்டுள்ளார். (19)

## அரச ஊழியர்க்கு ஜனவரியில் விசேட முற்பணம்

அரசாங்கத்துறை ஊழியர்க்கு அடுத்தாண்டில்விசேட முற்பணம் வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது

ஜனவரி முதலாம் திகதிக்கும் பெப்ரவரி இருபத்து ஒன்பதாம் திகதிக்கும் இடையில் இக்கொடுப்பனவை அவர்கள் பெற்றுக் கொள்ளமுடியும்.

நிறைவேற்று அதிகாரிகள் தவிர்ந்த ஏனைய சகல ஊழியர்களும் இம் முற்பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்

தற்காலிக சமயாசமய ஊழியர்கள் உட்பட அனைவரும் இப்பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணத்தைச் சம அளவில் பத்து மாதங்களுக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டுமென சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (16)

## "கிழித்தெறியப்பட்ட முகத்திரைகள்"

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கத்தினர் பங்கேற்கும் "கிழித்தெறியப்பட்ட முகத்திரைகள்" எனும் நாடகம் பல பகுதிகளில் அரங்கேற்றப்பட்டு பலரினது பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. தொல்புரம், சுழிபுரம், மூளாய், வட்டுக்கோட்டைப் பகுதிகளில் பல முறை இந்நாடகம் மேடையேற்றப்பட்டுள்ளது. (ப- 1)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதியில் சதுரக்குடியிருப்புக் காணி எட்டே முக்கால் பரப்பு ($8\frac{3}{4}$) முழுமையாகவோ, தெற்குத்திசையில்பாதை அமைத்துத் துண்டுகளாகவோ உடன் விற்பனைக்கு உண்டு. திருமதி ஞா. சிதம்பரப்பிள்ளை விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

12014

### விற்பனைக்கு

சுத்தமானவேப்பெண்ணை விற்பனைக்குண்டு. போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 80/-மட்டுமே. இணுவில், திருநெல்வேலி, யாழ் ஆஸ்பத்திரி வீதி அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனைக்கு உண்டு மில்க்வைற்- யாழ்ப்பாணம். 12020

### சேவை

மீண்டும் யாழ் நகரில் தரமான போட்டோஸ்ரத், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 'ஸ்கைலைன்ஸ்' 281B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். காலை 9 00 மணி முதல் மாலை 2 00மணிவரை Skylines, 281B, Clock Tower Road Jaffna (ஏஜென்சி தபாற்கந்தோர் அருகாமை)

12008

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12026

## உணவுண்ட பின் மரணம்

## மர்மத்தின் பின்னணியில் கணவனுடன் மனைவியும்

காலை உணவை உண்ட வயோதிப பெண்மணி ஒருவரும், அந்த உணவை உண்ட வீட்டு வளர்ப்பு மிருகங்களான கோழி, நாய், பூனை என்பனவும் ஒன்றாக இறந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை வேலணையில்நிகழ்ந்துள்ளது.

வேலணை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நாகம்மா கதிரவேலு என்ற பெண்மணியே இவ்வாறு மர்மமரணத்தை தழுவிக்கொண்டவராவர்.

இவரது கணவர் கடந்த வருடம் இவ்வாறு உணவு உட்கொண்ட பின்னர் மர்மமான முறையில் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் விசாரணையை தொடர்ந்து மேற்கொண்டுவருகின்றனர். (19)

## உடையில்தான் நாகரிகம்

கார்த்திகைத் தீபத் தினத்தன்று அநாகரிகமான விதத்தில், தீபமேற்றிய வாழைக் குற்றிகளை தட்டி விழுத்தியும், தூக்கி வீசியும் சேட்டை புரிந்த நான்கு இளைஞர்கள் பொதுமக்களால் நையப் புடைக்கப்பட்டனர்.

கோப்பாய் நாவலடிப் பகுதியில் பிரதான வீதியிலேயே நவ நாகரிக உடையணிந்த வேற்றூரைச் சேர்ந்தோரே இச்செயலில்டுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (23

## ST. PATRICK'S COLLEGE - JAFFNA

## பிரவேச விண்ணப்பம் - 1991

பின்வரும் வகுப்புகளுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் வருடம்: 1-2-85 — 31-1-86 க்குள் பிறந்திருக்க வேண்டும்.

4-ம் வருடம் 1982 இல் பிறந்திருக்க வேண்டும்
6-ம் " 1980 " " "
9-ம் " 1977 " " "

- விண்ணப்பப் பத்திரம்:- ரூபா 30.00 (பரீட்சைக் கட்டணம் உட்பட). 3-12-90 தொடக்கம் 20-12-90 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில் வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.
- நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 28-12-1990 திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9.00 தொடக்கம் 12 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.
- தபால் மூலம் வரும் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- பிரவேசப் பரீட்சைத்தினம் 7-1-1991 காலை 8.30 மணிக்கு.
- 6 ஆம், 9 ஆம் வருட வகுப்புகளுக்கு நடாத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் பத்து வீத மாணவர்களுக்கு கடந்த வருடம் போல் யாழ் ஆயரது புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

கல்லூரி அதிபர்
12022

## 3ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு:
12-04-1920

உதிர்வு:
04-12-1987



திருமதி மேரி செபஸ்தியாம்பிள்ளை

"என் தந்தையின் ஆசி பெற்றவர்களே, உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கு உரிமையாகுக."

இவரின் ஆன்ம சாந்திக்காக பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் 4-12-90 செவ்வாய்க் கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

61/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

12029

# பிள்ளையார் கதை

கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த பின்னாளில், விநாயகர் விரதம் ஆரம்பமாகும். பக்தர்கள் இருபத்தோரிழை கட்டி, ஒருபோது உண்டு, ஒருமனமாய் விநாயகப் பெருமானை வழிபடுவர்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சுன்னாகம் வரதபண்டிதர் என்ற அறிஞர் செய்த 'பிள்ளையார் கதை' என்னும் நூல் இன்றும் யாழ்ப்பாணத்துக் கிராமப் புறங்களில் ஓதப்படுகிறது.



விநாயகப் பெருமானுக்கு உரிய மூன்று விரதங்களுள் விநாயக சஷ்டி விரதமும் ஒன்றாகும். இவ் விநாயக சஷ்டி விரதமே பிள்ளையார் கதை விரதம் என்றும் பெருங்கதை என்றும் அழைக்கப்படுகின்றது. கார்த்திகை மாதத்தில்வரும் சிறந்த முருக விரதமான திருக்கார்த்திகை விரதத்திற்கு அடுத்த நாள் தொடங்கி மார்கழி மாதத்து வளர்பிறைச் சஷ்டி திதி வரையிலான 21 நாட்களும் அநுட்டிக்கப்படுவது விநாயகசஷ்டி விரதமாகும். இவ்விரத காலத்தில் பிள்ளையார்கதை என்றழைக்கப்படும். விநாயகப் பெருமானதும் விநாயகசஷ்டி விரதத்தினதும் வரலாற்றைக்கூறும் நூலினைப் படித்தல், கேட்டல் செய்யும் காரணத்தால் இவ் விரதம் பிள்ளையார் கதை என்றும் பெருங்கதை என்றும் அழைக்கப்படுகின்றது. பெருமை வாய்ந்த விநாயகப் பெருமானதும் விநாயக விரதத்தினதும் வரலாற்றைக் கூறுவதனால் பிள்ளையார் கதையைப் பெருங்கதை என்றும் குறிப்பிடுகின்றனர்.

பிள்ளையார் கதை நூலில் 'சதயம் தொட்ட சட்டிநல் விரதம்' என்ற தொடரினை அடிப்படையாகக்கொண்டு சதயமும் சஷ்டியும் மார்கழி மாதத்தில் சேர்ந்து வராவிட்டால் சஷ்டியினைக் கவனிக்காது சதய நட்சத்திரத்தையே விரதத் தினமாகக் கொள்பவரும் இருக்கிறார்கள்.

விநாயகப் பெருமானின் தோற்றம், விநாயக விரதம் அநுட்டிக்கும் முறை, விநாயகவிரதத்தை அநுட்டித்தவர்களின் விபரம், விநாயக விரதத்தை அநுட்டித்தவர்கள் பெற்ற பலன்கள், விநாயக விரதத்தினை அலட்சியமாக அநுட்டித்ததால் ஏற்பட்ட துன்பம் என்பன பிள்ளையார்கதையில் கூறப்பட்டுள்ளன.

விநாயக சஷ்டி விரதத்தினைச் சிவபெருமானும் உமையம்மையாரும் அநுட்டித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

முருகனிடம் பிரணவ உபதேசம் பெற்ற முறைமையால் குருவைப் பணிதல் எவருக்கும் வஅசியம் என்பதை உணர்த்திய சிவபெருமான், எல்லோரும் விநாயகரின் முதன்மையையும் விநாயக விரதத்தின் மகிமையையும் உலகம் உணர வேண்டும் என்பதற்காகவே உமையம்மையாரோடு தாமும் விநாயக விரதத்தை அநுட்டித்துக் காட்டினார் நம்மைப் போன்றோர் விரதநியமங்களை மேற்கொள்ளும்போது சிரமப்படுவது போல் அல்லாமல் சிவபெருமானும் உமையம்மையாரும் விரதநியமங்களால் சிரமப்படாதிருப்பது மட்டுமன்றி நாம் சிறு குழந்தைகளுடன் கூடி மகிழ்வது போன்றே விரதம் அநுட்டிப்பதால் மகிழ்வுறுவர் என்பதையும் அறியவேண்டும்

விநாயக விரதம் அநுட்டிக்க ஆரம்பித்து அதனை இடையில் மறந்து அலட்சியம் செய்ததால் இலககணசுந்தரி என்னும் அரசி அவதிப்பட்ட செய்திகளைப்படிப்பவர் கேட்பவர் விநாயக விரதம் அநுட்டிப்பதற்கே அஞ்சுவதும் உண்டு

இலக்கணசுந்தரி விரதத்தை விட்டபோது அடைந்த துன்பங்கள் அவ்விரதத்தைத் தொடருவதற்காகவே அமைந்தன இலக்கணசுந்தரி விரதத்தைத் தொடர்ந்து அநுட்டித்து நன்மையடைய வேண்டும் என்பதற்காகத் தடுத்தாட் கொள்ளும் வகையில் விநாயகப்பெருமானின் கருணைச் செயலின்னளவே அத்துன்பங்கள். ''விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்.'' என்பதற்கான அழகிய கதையே இலக்கணசுந்தரி வரலாறு என்னும் உண்மையை அறிந்தால் விநாயகப் பெருமானின் பெருமையையும் விநாயகசஷ்டி விரதத்தின் பெருமையையும் ஓரளவு உணரமுடியும்.

— பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

## பாரதத் தலையீடு தேவை இ. காங். மீண்டும் வற்புறுத்து

"பாரதம் இலங்கைப் பிரச்சினையில் தலையிட வேண்டும்" என்று தான் பிரதமர் திரு சந்திரசேகரைக் கேட்டுக் கொண்டுள்ளதாக தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தானும் காங்கிரஸ் எம். பி திரு. ஜெகமோகனும், அ. தி. மு.க.எம். பிக்கள் திரு.சேதப்பட்டி முத்தையா, திரு தம்பித்துரை ஆகியோரும் இது விடயமாகப் பிரதமரை டில்லியில் கூட்டாகச் சந்தித்ததாகவும் அவர் கூறினார்.

இதேவேளை இலங்கை இந்திய ஒப்பந்தமே இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும் என்று திரு. தனுஷ்கோடி ஆதித்தன் எம். பி கூறியுள்ளார்.

### மத்திய இணைஅமைச்சர் தமிழகம் வருகிறார்

# தி. மு. க. ஆட்சியைக் கவிழ்க்க எதிரணியினர் பகீரதப்பிரயத்தனம்

தமிழகத்தில் கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முயற்சியில் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி உட்பட அ. தி. மு. க. எம். பிக்கள் மிக வலுவாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தமிழக அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கிறது என்ற குற்றச்சாட்டை சுமத்த பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தமிழகத்தில் உள்ள நிலைமை குறித்து அறிவதற்காக உள்துறை இணையமைச்சர் திரு. சுபாஸ்கோன் சகாய் அடுத்த வாரம் தமிழகத்திற்கு வரக்கூடும் என்று பி ரி ஐ செய்தி ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

பிரதமரின் உத்தரவின் பேரில் அவர் தமிழகம் வருவதாகவும் அச்செய்தி மேலும் கூறியது.

அவர் தமிழக முதல்வரைச் சந்திப்பார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## பார்த்திபனுக்கு பரிசு

சிறந்த கதாசிரியருக்கான சிறப்பு விருதை திரு. பார்த்திபனுக்கு வழங்கி தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி கௌரவித்தார்.

'புதியபாதை' திரைப்படத்திற்காக இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டது.

சிறந்த பாடலாசிரியர் விருது கவிஞர் வாலிக்கு வழங்கப்பட்டது.

சிறந்த பின்னணிப் பாடகருக்கான விருது கே. ஜே. ஜேசுதாஸுக்கும் சிறந்த பின்னணிப் பாடகிக்கான விருது பி. சுசீலாவுக்கும் வழங்கப்பட்டது. எம் ஜி ஆர் விருது ஜெமினி கணேசனுக்கும் சௌகார் ஜானகிக்கும் வழங்கப்பட்டது.

## டி. ஆர். ராமச்சந்திரன் காலமானார்

தென்னிந்தியாவின் பழம் பெரும் நடிகர் டி.ஆர் ராமச்சந்திரன் அமெரிக்காவில் மாரடைப்பினால் காலமானார்.

73வயதான அவர் வாழ்க்கை நாம் இருவர், கடன் வாங்கிக் கல்யாணம் உட்பட பல படங்களில் நடித்துப் புகழ்பெற்றவராவார்.

## இன்று 'சனிமாற்றம்' வெளியீட்டு விழா

ஆத்ம தத்துவஞான பேராசிரியரும், ஜோதிடவிஞ்ஞான நூலாசிரியருமான திரு.த. சத்துயதாஸன் எழுதிய டிசம்பர் நடுப்பகுதியில் மீண்டும் "சனி மாற்றம்' என்னும் சஞ்சிகை வெளியீட்டு வைபவம் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணியளவில், சித்திர மேழிப்பழனியானந்தன் சனசமூக நிலைய மண்டபத்தில், திரு பொ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும்.

## கடை உடைக்கப்பட்டு பொருட்கள் களவு

வட்டுக்கோட்டை துணவிப் பகுதியில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றில் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

நள்ளிரவு நேரத்தில் இக்கடையின் கூரையைப் பிரித்து உட்புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர்கடையில் இருந்த அரிசி, மாவு, சீனி. பால்மா, சவர்க்காரம் முதலான பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இதே வேளைசில கிராமங்களில் உள்ள கோவில் உண்டியல்களும் உடைக்கப்பட்டு திருடப்படுவதாக அறியக் கிடக்கிறது. (12)

### ஈராக் புரட்சிச் சபையும் இசைவு

## வளைகுடா நெருக்கடியில இறுதிச் சமாதான முயற்சி

உலகளாவிய ரீதியில் சமாதானம் நாடும் மக்களிடையே பெரும் கிலேசத்தை ஏற்படுத்தியிருந்த வளைகுடா நிலைமையில் இப்போது திடீர் மாற்றம் உண்டாகியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் ஈராக்குக்குஎதிரான இராணுவ நடவடிக்கைக்கு ஐ.நா. பாதுகாப்புச்சபை அங்கிகாரம் அளித்திருந்தது. ஜனவரி 15-ம் திகதிக்குள் தன் ஆக்கிரமிப்பை ஈராக் கைவிடாவிட்டால் அதன்மீது இராணுவ நடவடிக்கை மேற் கொளள காலக்கெடுவும் இதன் மூலம் வெளியிடப்பட்டது.

இதற்கிடையில், நேரடிப் பேச்சு நடத்தும் அமெரிக்காவின் யோசனையை ஈராக் ஏற்றுக்கொண்டுள்ளது. பேச்சு வார்த்தைக்கு பாக்தாத்தில்புரட்சி இராணுவ சபையின் இம்முடிவு அறிவிக்கப்பட்டது.

வளைகுடாவில் போரைத் தவிர்க்கும் இறுதி முயற்சியாக பாத்தாத்திற்குத் தனது வெளியுறவு அமைச்சர் திரு. ஜேம்ஸ்பேகரை அனுப்பவும் தயார் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

### விமான நிலைய விஸ்தரிப்புக் காணி

## குத்தகையாளருக்கு நட்டஈடு; உரிமையாளர்க்கு எதுவுமில்லை

பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்புக்காக அரசால் சுவீகரிக்கப்பட்ட மயிலிட்டி, குரும்பசிட்டிப் பகுதி மக்களுக்குரிய நட்ட ஈடு இன்னும் வழங்கப்படவில்லை.

குத்தகைக்கு விவசாயம் செய்த தோட்டக்காரர்களுக்கு மட்டும் பரப்புக்கு 600 ரூபா வீதம் நட்டஈடு வழங்கப்பட்டபோதும், காணி உரிமையாளர்களுக்கும் சொந்தக் காணியில் விவசாயம் செய்தவர்களுக்கும் எதுவும் வழங்கப்படாதது குறிப்பிடத்தக்கது. (32)

## யாழ் மாநகர ஆதன வரி மதிப்பீட்டு வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட சகல ஆதனங்களின் மீள்மதிப்பீட்டு வேலைகள் இவ்வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டு, வேலைகள் துரிதகதியில்நடைபெற்று வந்தன. இவ்வேலைகளை யாழ் விலைமதிப்பீட்டுத் திணைக்களம் மேற்கொண்டு வந்தது இவ்வருட இறுதிக்குள் மதிப்பீட்டு வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டு 1991-ம்ஆண்டு ஜனவரி மாதம் முதல் புதிய வரியினைநடைமுறைப்படுத்த மாநகர சபை அதிகாரிகள் திட்டமும் தீட்டியிருந்தனர்.

மொத்தமாக 23வட்டாரங்களில் ஆரம்பகட்டவேலைகள் முடிவடையும் கட்டத்திலும், இறுதிக் கட்ட வேலைகள் ஒரு சிலவட்டாரங்களிலும் நடந்து கொண்டிருக்கையில் யூன் மாதம் ஏற்பட்ட சீரற்ற சூழ்நிலைகளினால் வேலைகள் யாவும் தொடர முடியாமல் தடைப்பட்டது.

குண்டு வீச்சினால் வீடுகள், வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் பல கட்டிடங்கள் நாசமாக்கப்பட்டு சில பகுதிகளில் ஏற்கனவே மதிப்பீடு பூர்த்தியான கட்டிடங்களும் வீழ்ந்து கிடக்கின்றபடியால், திரும்பவும் இவற்றை மதிப்பீடு செய்வதில் சிரமங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சில காணிகளின் எல்லைகள கூடத் தெரியாத அளவிற்கு சேதமாக்கப்பட்டுள்ளன

மாநகரசபையினுள் ஏறத்தாழ 35,000 ஆதனங்கள் உள்ளன இவற்றை மீள மதிப்பீடு செய்து புதிய வரியினை மக்களிடமிருந்து அறவிடுவதன் மூலம் மாநகரசபைக்கு பாரிய அளவில் வருவாய் 1991-ம் ஆண்டில் பெறமுடியுமென அதிகாரிகளினால் எதிர்பார்க்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-1)

## இரண்டாயிரம் பேருக்கு ஆங்கில ஆசிரியர் நியமனம்

ஜனவரியில் இரண்டாயிரம் பேருக்கு ஆங்கில ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது

இதற்கான நடவடிக்கையை கல்விச்சேவை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

இதன் மூலம் நாட்டில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே ஆங்கில ஆசிரியர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்களிலிருந்து ஆயிரம் பேருக்கும் செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஆங்கில ஆசிரியர் நியமனப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் ஆயிரம் பேருக்கும் இந்நியமனம் வழங்கப்படவுள்ளது.

# உலக அரங்கில்

## சாட் தலைநகர் கிளர்ச்சியாளர் வசம்

வடஆபிரிக்க நாடான சாட்இல் இயங்கிவரும் லிபிய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் நேற்று தலைநகர் இன்டிஜாமினாவைக் கைப்பற்றிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் தலைநகரில் புகுந்த கிளர்ச்சியாளர்கள் வானொலி நிலையத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

இதேவேளை கிளர்ச்சியாளர்களின் வருகையின் முன்பாகவே அமைச்சர்கள் அனைவரும் அயல்நாடான கமருனுக்கு தப்பியோடிவிட்டனர். எனினும் ஜனாதிபதி சாம்ரேயின் நிலைகுறித்து தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை.

பிரெஞ்கொலனியான சாட்இல் கிளர்ச்சியாளர் முன்னேற்றம் தலைநகரை நோக்கி இருந்ததையடுத்து கடந்த வாரம் மேலதிகமாக பிரெஞ் துருப்புகள் சாட்இற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

எனினும் ஈட்டரியோ என்ற முன்னாள் ராணுவ அதிகாரியின் தலைமையிலான கிளர்ச்சியாளர்கள் நேற்று தலைநகரை கைப்பற்றியுள்ளனர்.

தலைநகர் இன்டிஜாமினா கிளர்ச்சியாளரின் கையில் விழுந்ததையடுத்து நேற்று இரு விமானங்களில் அங்கிருந்து பிரெஞ் பிரஜைகள் வெளியேறினர். தலைநகரில் இப்போது கிளர்ச்சியாளர்கள் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்துள்ளனர்.

## நான்கு இஸ்ரேலியர்கள் வெட்டிக் கொலை

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா வலையத்தில் நேற்று நான்கு இஸ்ரேலியர்கள் பலஸதீனியர்களினால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

பஸ் ஒன்றை மறித்த இவர்கள் அதிலிருந்த நான்கு இஸ்ரேலியர்களையும் வெளியே இழுத்து வெட்டிக்கொன்றனர் இச்சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த இஸ்ரேலியப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பலஸ்தீனியர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியில் ஆயுதபாணி ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மூன்று இஸ்ரேலிய சிப்பாய்கள் பலியானதும் இருபது பொதுமக்கள் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா-ரஷ்யாவில் இருந்து ஒரேசமயத்தில்விண்கலம்ஏவப்பட்டது

நேற்று அமெரிக்காவில் இருந்தும் ரஷ்யாவில் இருந்தும் ஒரே சமயத்தில் விண்கலங்கள் ஏவப்பட்டன.

அமெரிக்க கெனடி ஏவு தளத்தில் இருந்து புறப்பட்ட கொலம்பியா விண்கலத்தில் ஏழு விண்வெளி ஆய்வாளர்கள் சென்றுள்ளனர். விண்ணில் நிலைகொண்டுள்ள Astro-I எனும் விண்வெளி தொலை நோக்கியில் சில ஆய்வுகளை இவர்கள் மேற்கொண்டனர்.

இதே வேளை ரஷ்யாவில் இருந்து ஏவப்பட்ட விண்கலத்தில் இரு ரஷ்ய விண்வெளி ஆய்வாளர்களும் யாக்க ஹாமா (48) என்ற ஜப்பானிய பத்திரிகையாளரும் பயணம் செய்கின்றனர். விண்வெளிக்கு செல்லும் முதல் ஜப்பானிய பிரஜையாக இவர் விளங்குகிறார் விண்வெளியில் நிலைகொண்டுள்ள ரஷ்யமீர் விண்வெளி ஆய்வு நிறுவனத்திற்கு செல்லவுள்ள இந்தப்பத்திரிகையாளர் விண்வெளியில் நடப்பவற்றை உடனுக்குடன் செய்தியாக இம்முறை தொலைக்காட்சியில் ஒளிபரப்ப நடவடிக்கை எடுத்துள்ளார்.

## சர்வதேசப்படையினரிடையேதிடீரென ஏற்பட்ட பதற்றம்!

சவுதியில் நிலைகொண்டுள்ள சர்வதேசப் படைகளிடையே நேற்றுக்காலையில் திடீர் பதற்ற நிலை காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை கிடைத்த இரகஸிய தகவல் ஒன்றின்படி ஈராக் தனது ஏவுகணைகளை தயாரான நிலைக்கு கொண்டு வருவதாக அறியப்பட்டதுமே இத்திடீர் பதற்றம் காணப்பட்டது.

படை அதிகாரிகள், படையினரை இரசாயன ஆயுதங்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய ஆடைகளையும் முகக்கவசங்களையும் உடனடியாக அணியுமாறு உத்தரவிட்டனர்.

எனினும் கிடைத்த இரகஸிய தகவல் ஊர்ஜிதமற்றது என பின்னர் தெரியவந்ததாம்.


## காணவில்லை

செல்லப்பா-சற்குணேஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. 663171478V. கல்வித் திணைக்கள அடையாள அட்டை அடங்கிய மணிப் பேர்ஸ் நல்லூர் வீரமாகாளியம்மன் கோவிலுக்கும் திருநெல்வேலி கேணியடிக்கும் இடையில் தவறி விட்டது. தயவு செய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் நல்லூரில் உள்ள மண்டேலா புத்தகசாலையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

12032


இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 03-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

### அக்டோபரில் நிகழ்ந்த படகு விபத்தில் உயிர் தப்பிய கிருஷ்ணசாமிக்குருக்கள் தகவல்

# இந்திய மீனவர் பார்த்து நிற்க தமிழ் அகதிகள் படகு கவிழ்ந்தது!

கடந்த அக்டோபர் 7 ஆம் திகதி அனலைதீவில் இருந்து இந்தியாவுக்கு படகில் செல்லுகையில் தமிழகக்கரையில் அப்படகு கவிழ்ந்தபோது தமிழக மீனவர்கள் உதவிக்கு வராது பார்த்துக்கொண்டு இருந்தனராம்.

இவ்வாறு அப்படகில் இருந்து தப்பிய அனலைதீவைச் சேர்ந்த கிருஷ்ணசாமிக்குருக்கள் (55) தெரிவித்தார்.

அனலைதீவில் உள்ள பிரசித்திபெற்ற ஐயனார் ஆலயக்குருக்களான இவரின் மனைவியும், மூன்று பெண் பிள்ளைகளும், மூத்த சகோதரர் கோபால் ஐயரும் அவரின் குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரும் இவ்விபத்தில் இறந்துள்ளனர்.

7 ஆம் திகதி அதிகாலை 1 மணியளவில் தமிழகக் கரையை எமது படகு அண்மித்துக் கொண்டிருந்த போது படகில் ஓட்டை விழுந்து, கடல் நீர் உட் புகுந்தது.

"உடனடியாக நாம் கையில் இருந்த துணிகளை எல்லாம் எடுத்து அத்துவாரத்தை அடைத்துப்பார்த்தோம் ஆனால் அம் முயற்சி சரிவரவில்லை.

"எல்லோரும் அபயக்குரல் எழுப்பினோம் எமக்கு அண்மையில் இந்திய மீனவர்கள் படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

"எமது நிலையைக் கூறி உதவுமாறு கெஞ்சினோம் இருக்கிற பொருட்களை எல்லாம் தருவதாகவும் சொன்னோம். ஆனால் அவர்கள் உதவ முன்வரவில்லை..

இந்த நிலையில் தான் எங்களில் பலர் கடலில் குதித்து நீந்தத் தொடங்கினோம். அதன் பின்னர் படகு மூழ்கியது.

"என் கண்முன்பாக எனது மனைவி பிள்ளைகள் எல்லாரும் மூழ்கினர். நான் இப்பொழுது தனிமரமாக நிற்கிறேன் எனது அண்ணன் குடும்பத்தையும் இழந்து விட்டேன் இனி யாருக்காக நான் உயிர் வாழ வேண்டும்?"

இவ்வாறு கிருஷ்ணசாமி குருக்கள்தெரிவித்தார் (66)

### விடுதலை ..

தலைப் போராட்டத்தில் இணைந்து தம் பங்களிப்பினைச் செய்ய ஈழத்துக்கலைஞர்கள் முன்வர வேண்டும். அப்பங்களிப்பினை தமிழீழ வரலாறு பெருமையுடன் நினைவுகொள்ளும் என்றார்."

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் பேசுகையில், இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழின விடுதலை பற்றிப் பேசுவது பிற்போக்கு என்று கருதப்பட்டது. ஆனால் இன்று தமிழீழம் என்பது காலத்தின் தேவை என்று உணரப்படுகிறது. எனவே இந்த ஒலிநாடா வெளியீடு ஒரு கால சங்கமம் ஆகவும், கலாசங்கமாகவும் கணிக்கத்தக்கது.

எங்கள் மரபில், வேதங்களையடுத்து உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்பன வரும். விடுதலை வேதங்களையடுத்து வேங்கைகள் பற்றிய இதிகாச புராணங்களை எதிர்பார்க்கலாம் என்றார்.

இவ்வைபவத்தில் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ராஜன், மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி மாலினி, கம்பன்கழக அமைப்பாளர் இ ஜெயராஜ் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். திரு. தேவர் நன்றி கூறினார். (70)

### குருநகர் ..

இராணுவ நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட இம் மீனவர்கள் கடற்படையினரின் இவ்வாறான அடாவடித்தனங்களால் தொழில் செய்யக் கூடமுடியாது மேலும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். (ப 17)

### பிரதி...

திரங்கள் அனுப்பி வைக்கப்படும் என உறுதி கூறப்பட்டது.

ஆனால் இவற்றுக்குப்பதிலாக விண்ணப்பப்படிவங்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என இவ் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66)

### முல்லைத்தீவு ..

மேற் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது. (70)

## வடபகுதி நிலைமையால் தும்புத்தொழில் பாதிப்பு

வழமையாக வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்படும் தும்புத்தடி, கயிறு வகைகள் மற்றும் தென்னந்தும்பிலான பொருட்கள் பெருமளவில் தென்பகுதியில் தேங்கிக்கிடக்கின்றன.

இவற்றை அங்கு விற்க முடியாத நிலை இருப்பதனால் இவ்வாறான பல தொழில் நிலையங்களை மூட வேண்டிய நிலை இருப்பதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை இப் பொருட்களை வடபகுதிக்கு அனுப்ப அரசிடம் அனுமதி கேட்டதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன (66)

### முன்னாள்...

பிரதேச முதலமைச்சரின் வீட்டிற்கு முன்பாக உண்ணாவிரதம் இருந்தார்.

கல்லெறி நடந்தபோது பொலிஸார் அதைப்பார்த்தவாறு நின்றதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

### கிராமசேவகர்...

கப்படவில்லையானால் சம்பந்தப்பட்டவர்கள் யாழ் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தவர்கள் பலர் நிவாரணம் பெற முடியாது கிராமசேவகர்களிடமும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அலைந்து திரிவதாக வெளியான புகார்களையடுத்தே அவ்வதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

### அரியாலையில்...

அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அண்மைய மும்முனைத்தாக்குதல் காரணமாக குருநகரில் உள்ள பல உயர்ந்த வீடுகள் தரைமட்டமாகி உள்ளதுடன் செல்வந்தர்கள் கூட மிகவும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது ப 17

### குருமன்

பகுதிக்கு வந்த இராணுவத்தினர் 3 பொது மக்களை கைது செய்துள்ளனர். முத்துவேல் கனகலிங்கம் (22) வெல்லாவெளி, தங்கராசன் (முகமூர்முனை), கோபால் என்பவரின் மகன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள். இவர்களிற்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியவில்லை. (71)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 24 — 06 — 1920



மறைவு: 03 — 11 — 1990

### அமரர் சபாபதி இராசதுரை

எமக்கெல்லாம் நல்வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றும் அகலாதிருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
பிரிவால் வாடும்
மனைவி-விசாலாட்சி
மகள்-ஜெயலட்சுமி
மகள்-விஜயலட்சுமி
மருமகன் கமலேஸ்வரன்
பேரன்-ஆநிதன்

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

12033